திருச்சிராப்பள்ளி கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் - திரு.எம். பாலசுப்பிரமணியன், எம்.எல்.எம்.,பிஜிடிஎல்ஏ.,

சுருக்கம்

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி.ம.வைதேகி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு - திண்டுக்கல் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டது - பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தி உத்தரவிடப்படுகிறது

---

அ/3175/19-2 நாள் .02.2020.

படிக்கப்பட்டது

1. அரசாணை எண் 190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 20.09.2007.
2. அரசாணை எண் 130 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 22.07.08
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண் 1734/PSD-F/2019 நாள் 20.02.2019.
4. சென்னை தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ஜி3/44771/18-1 நாள் 01.03.2019.
5. திண்டுக்கல், தொழிலாளர் இணை ஆணையரின் கடிதம் எண் அ1/289/2020 நாள் 28.01.2020.

------

***ஆணை***

பார்வை (3)ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திருமதி.ம.வைதேகி என்பவர் பார்வை (4)ல் காணும் சென்னை தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திண்டுக்கல், தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு 08.03.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, திருமதி.ம.வைதேகி இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 08.032019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர்பணியில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார்.

தனியரின் பணிவரன்முறையானது, மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வுகள் தொகுதி-IVல் அடங்கிய தெரிவிற்கெதிராக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகுதிகாண் பருவகாலத்தில் தனியர் பார்வை (2)ல் காணும் அரசாணையின்படி பணிநியமனம் செய்யப்பட்ட இரண்டு வருடங்களுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்தபின் உரிய காலகெடுவுக்குள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தமைக்கு சம்பந்தப்பட்ட அலுவலரால் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தனியர் அடுத்த பதவி உயர்விற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1 மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை தேர்வு பகுதி -அ மற்றும் ஆ-வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் பதிந்து அதன் விவரங்களை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு திண்டுக்கல் தொழிலாளர் இணை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

18/2/2020

கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
திருச்சிராப்பள்ளி

17/02/2020

பெறுநர்

1. திருமதி.ம.வைதேகி இளநிலை உதவியாளர், தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம், திண்டுக்கல் (உரிய வழியாக)

நகல் - 1. தொழிலாளர் இணை ஆணையர், திண்டுக்கல்.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.
தொழிலாளர் ஆணையர், சென்னை - 06
நகல் - பணிப்பதிவேடு உபரி.